# உத்தமம்



ஆசிஷ் ராய்ச்சூர்

## இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.
தற்போதைய பதிப்பு: 2024

## தகவல் தொடர்புக்கு

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA.

தொலைபேசி: +91-80-25452617
மின்னஞ்சல்: **bookrequest@apcwo.org**
இணையதளம்: **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI, தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

## நிதி பங்குதாரர்கள்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

## இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச் :** apcworldmissions.org

(Tamil – Integrity)

# உத்தமம்

# பொருளடக்கம்


அறிமுகம்

1. உத்தமத்திற்கான வழிமுறைகள் 1

2. தேவன் நம் உத்தமத்தை (அல்லது அதில் குறைவுற்றிருத்தலை) ஆராய்ந்து அறிகிறார் 5

3. நாம் ஏன் இன்னும் நமது உத்தமத்தில் சமரசம் செய்துகொள்கிறோம்? 7

4. நேர்மையின்மையின் விளைவுகள் 10

5. உத்தமனின் ஆசீர்வாதங்கள் 13

6. மறுஉத்தரவு - விடுதலை, மனந்திரும்புதல், துறப்பு மற்றும் அர்ப்பணிப்பு 16

# அறிமுகம்

இந்த உலகில் நடைபெறும் சீர்கேட்டைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், நம் அனைவருக்கும் பல கதைகள் இருக்கும், குறிப்பாக நாம் அரசாங்க அலுவலகங்கள் அல்லது பிற இடங்களுக்குச் செல்லும்போது, கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் ஊழல், நேர்மையின்மை மற்றும் லஞ்சம் போன்றவற்றை எதிர்கொள்கிறோம். இவை சாதாரணமான ஒன்றுபோல் தெரிகிறது. நேர்மையின்மை, ஏமாற்றுதல் மற்றும் பொய் சொல்வதற்கான காரணங்கள் இருக்கும்வரை அவைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை என்பதுபோல தோன்றுகிறது.

இருப்பினும், தேவனுடைய மக்களாகிய நம்மிடையே நேர்மையின்மை, அநீதி, மற்றும் உத்தமமின்மையைப் பார்ப்பது மிகவும் வருத்தம் அளிக்கிறது. ஏனென்றால் குறைந்தபட்சம் நாம் அவற்றை நன்றாக அறிந்திருக்கவும் கடைப்பிடிக்கவும் வேண்டும்! உத்தமம், நேர்மை, பரிசுத்தம் மற்றும் நீதியாய் நடப்பது எவ்வாறு என்பதனை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நாம் தேவனுடைய வார்த்தையையும் அவை கற்பிக்கும் அனைத்தையும் வேதத்தில் வாசிக்கிறோம். போதகர்கள், பிரசங்கியார்கள், சுவிசேஷகர்கள் மற்றும் வேதவார்த்தையினைப் பிரசங்கிக்கும் ஊழியர்கள் மத்தியில் நீதியின்மை, நேர்மையின்மை மற்றும் அநியாயத்தைக் காண்பது இன்னும் மோசமானது. “கிறிஸ்தவத்தில்” லஞ்சம், பொய், நேர்மையின்மை போன்ற பல கதைகளை நம்மில் அநேகரால் பகிர்ந்துகொள்ள முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்!

பெங்களூரில், நாங்கள் ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சை ஸ்தாபித்தபோது ஒவ்வொரு கிறிஸ்தவரும் உண்மையையே பேசவேண்டும் என்ற மனநிலையில் இருந்தோம். அவ்வாறு நினைத்ததற்குக் காரணம், அதற்கு முன் நாங்கள் பணியாற்றிய மற்றும் எங்களுடன் பழகிய சிறிய சமூகத்தினர்களில் பெரும்பாலான மக்கள் உண்மையைப் பேசினார்கள், மேலும் அத்தகைய மக்களை முழுமையாக நம்பியதால் நாங்கள் இவ்வாறு நினைத்திருக்கலாம். எனவே, அதே எண்ணத்துடன் தொடர்ந்து செயல்பட்டோம். இருப்பினும், கிறிஸ்தவர்கள் பொய் சொல்வதைக் கண்டு நாங்கள் அதிர்ச்சியடைந்தோம்! எங்களின் உடனடி எதிர்வினை ஒருவித நம்பிக்கையின்மையாக இருந்தது— “கிறிஸ்தவர்கள் அவ்வாறு பொய் சொல்லி, அநியாயமாக

நடந்துகொண்டு, நேர்மையற்று செயல்படக்கூடாது!"

நேர்மையற்ற தேவ ஊழியர்களையும் போதகர்களையும் கூட நாங்கள் சந்தித்துள்ளோம். அவர்களின் "நல்ல" ஊழிய அறிக்கைகளைக் கேட்டும் அவர்களின் "செய்கைகளின்" புகைப்படங்களைப் பார்த்தும் அவர்களின் வார்த்தைகளை நம்பி பல ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை எழுதிய பல சந்தர்ப்பங்களை என்னால் விவரிக்க முடியும். ஒருவரைப் பார்த்து அவர்களுடைய வார்த்தைகளை நம்பிவிட முடியாது என்பது பின்னரே எங்களுக்குப் புரிந்தது. உண்மையிலேயே மக்கள் மேல் நம்பிக்கை வரும்வரை அவர்களை நம்பமாட்டோம் என்ற முடிவுக்கு வந்தோம்! மக்களை முழுமையாக நம்புவதற்கு முன் அவர்களை மதிப்பீடு செய்யவேண்டும் என்று எங்கள் யோசனையை மாற்றிக்கொள்ளும் நிலைக்கு வந்தோம்.

தேவனுடைய மக்களாகிய நமக்குள் பின்வருவனவற்றை புத்துணர்ச்சி பெறச் செய்வதே இப்பதிப்பின் நோக்கங்களாகும்:

- உத்தமத்திற்கான அர்ப்பணிப்பு.
- நேர்மைக்கான அர்ப்பணிப்பு.
- நம் வணிகங்கள், தொழில்கள், பேச்சு மற்றும் நாம் செய்யும் எல்லாவற்றிலும் நீதி மற்றும் நேர்மைக்கான அர்ப்பணிப்புடன் இருக்கவேண்டும். "என்ன நடந்தாலும், நீதியை நடப்பிக்க உறுதியுடன் இருப்போம்" என்பதே நம் மனநிலையாய் இருக்க வேண்டும்.
- நேர்மையாய் நடப்பதற்கான ஆசீர்வாதங்களைப் பற்றியதோர் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். நம் வசதிக்காக பொய்களைப் பேசுவதை தேர்ந்தெடுக்கும்போது, தேவன் நமக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை இழக்கிறோம் என்பதை நாம் உணராதிருக்கிறோம்.
- தேவனுக்கு அடிபணிந்து, நம்மைப் பிடித்து வைத்திருக்கும் அடிமைத்தனங்களை உடைக்க அவரை அனுமதிக்கும்போது, நாம் மாற்றப்படுவோம். நம்மில் சிலர் தம்மைத்தாமே கட்டுப்படுத்தி, மனதார விரும்பினாலும் உண்மையைப் பேச முடியாமல் போகலாம். அப்படியானால், வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பொய் மற்றும் ஏமாற்றும் ஆவிகளிலிருந்து நாம் விடுவிக்கப்பட வேண்டும்.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆசிஷ் ராய்ச்சூர்

# 1
# உத்தமத்திற்கான வழிமுறைகள்

உத்தமமாகவும், நீதியாகவும், நேர்மையாகவும் நடக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது.

**நீதிமொழிகள் 6:16-19**
**16ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள்.**
**17அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை.**
**18துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால்,**
**19அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே.**

நீதிமொழிகள் 6:16-19 தேவன் வெறுக்கும் விஷயங்களைப் பட்டியலிடுகிறது. பொய் பேசுதல், தீயவற்றைக் கற்பனை செய்தல், தீமை செய்தல், பொய் சாட்சி கூறுதல் மற்றும் முரண்பாடுகளை விதைத்தல் ஆகியவை இதில் அடங்கும். எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் பொருளாளர் உண்மைக்குப் புறம்பான வரவு செலவு கணக்கு அறிக்கையை உருவாக்குவதென்பது அடிப்படையில் துராலோசனையைப் பிணைப்பதாகும். நாம் பார்க்காத ஒன்றைப் பார்த்தோம் என்று சொன்னால், அது ஒரு தவறான சாட்சியாக இருக்கும், அது அவரது பார்வையில் அருவருப்பானது.

**நீதிமொழிகள் 12:22**
**பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்.**

தேவன் “பொய் உதடுகளை” ஓர் குணாதிசய பிழையாக மட்டும் பார்த்து அதனை மன்னித்துவிடுவதில்லை. அவை தேவனுக்கு அருவருப்பானது என்பது அவர் அதை சற்றும் பொறுத்துக்கொள்வதில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. மறுபுறம், உண்மையாக நடந்துகொள்பவர்களே அவருடைய மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள். நமது வேலைகளிலும், நிதிநிலையிலும் மற்றும் நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் நேர்மையாக இருக்கத் தீர்மானித்தால், நாம் அவருடைய மகிழ்ச்சியாயிருக்கிறோம் என்று வேதாகமம் கூறுகிறது. நாம் உண்மையாக நடந்துகொள்ளும்போது. தேவன் மிகவும் மகிழ்ச்சியடைகிறார். உண்மைக்குப் புறம்பான ஒன்றைச் செய்யும்படி நம் அதிகாரி நம்மைக் கேட்கிறார் என்று

வைத்துக்கொள்வோம், நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமா அல்லது நம் அதிகாரியைப் பிரியப்படுத்த வேண்டுமா என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். அதைத் தெரிந்துகொள்வது முற்றிலும் நம்முடைய தீர்மானமாய் இருக்கிறது. நாம் உத்தமத்திற்கு முற்றிலும் அர்ப்பணித்தவர்களாக இருக்க வேண்டும்.

**யாத்திராகமம் 23:6-8**
**6உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்தில் அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.**
**7கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக; குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைசெய்யாயாக; நான் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன்.**
**8பரிதானம் வாங்காதிருப்பாயாக; பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான்களின் வார்த்தைகளைப் புரட்டும்.**

சில சமயங்களில் நாம் பொய்யைக் கடைப்பிடித்து உண்மையைப் பாதுகாக்கவேண்டும் என்று நினைப்பது வேடிக்கையானது! அவை தேவையற்றது,ஏனென்றால் உண்மை தானாகவே நிலைநிற்கும்,அதை நம் பொய்களால் பாதுகாக்கவேண்டிய அவசியமில்லை. வேலையில் அடிக்கடி நிகழும் இந்தச் சூழலைக் கவனியுங்கள் - சக ஊழியர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் அழைத்து, அவர் நலமுடன் இருக்கிறார் என்றும், அவர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும், வேறு காரியத்திற்கு விடுமுறை எடுக்கத் திட்டமிட்டுள்ளார் என்றும் முதலாளியிடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறார். நீங்கள் அவ்வாறு செய்ய ஒப்புக்கொண்டு முதலாளியிடம் பொய் சொல்கிறீர்கள். உங்கள் நண்பருக்கு உதவுவதன் மூலம் நீங்கள் ஏதோ நல்லது செய்கிறீர்கள் என்று நினைக்கலாம், ஆனால் உங்கள் நண்பர் உடல்நிலை சரியில்லாமல் இல்லை, மாறாக சில தனிப்பட்ட வேலைகளைச் செய்ய அவர் வெளியே சென்றிருக்கிறார் என்பதை அறிந்தும் நீங்கள் பொய் சொல்கிறீர்கள். அவருடைய பொய்யில் நீங்கள் அவருடன் கூட்டு சேர்ந்துவிட்டீர்கள் என்பதே உண்மை. யாத்திராகமம் 23:7 பொய்யான விஷயத்திலிருந்து விலகி இருக்கச் சொல்கிறது. இது போன்ற விஷயங்களில் ஈடுபடாதீர்கள். முதலாளியிடம் உண்மையைப் பேசுமாறு உங்கள் சக ஊழியரிடம் தைரியமாகச் சொல்லுங்கள். நண்பர்களுக்கு நன்மை செய்கிறோம் என்று நினைத்து சில சமயங்களில் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகிறோம். இல்லை, நாம் நன்மை செய்யவில்லை!

**சங்கீதம் 34:13**
**உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.**

நம் நாவுகளைக் கட்டுப்படுத்தும்படி நாம் கேட்கப்படுகிறோம் (சங்கீதம் 34:13). நம் நாவுகள் நமது கட்டுப்பாட்டில் உள்ளன,

பிசாசின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை நினைவில் வையுங்கள். சிலர், “பிசாசு என்னைப் பொய் சொல்ல வைத்தான்” என்று தங்களுக்குத் தாங்களே சாக்குப்போக்குச் சொல்கிறார்கள். அவர்கள் பொய் சொன்னார்கள் என்பதே உண்மை. இப்போதும் சிலரை பிசாசு தூண்டி கட்டுப்பாடின்றி பொய் சொல்லும் அளவிற்கு அவர்களை, அடிமைத்தனத்தில் வைத்திருக்கலாம், ஆனால் இந்த அடிமைத்தனத்தை இயேசுவின் நாமத்தால் முறித்துப்போட முடியும். இருப்பினும், இறுதியாக, நமது நாவுகள் நம் கட்டுப்பாட்டில் உள்ளன. பொய் சொல்லும் பழக்கம் இருப்பதால், பிசாசையோ, நம் பெற்றோரையோ, உறவினர்களையோ, நாம் வளர்க்கப்பட்ட சூழலையோ குறை சொல்லவேண்டாம். நாம் நமது நாவைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பொய் சொல்லும்போது நாம் பயன்படுத்தும் மற்றொரு சாக்கு, “தேவன் என் இருதயத்தை அறிவார். நான் கொஞ்சம் பொய் சொன்னாலும் உண்மையிலேயே மிகவும் நேர்மையாக இருக்கிறேன்” என்பதாக இருக்கிறது. இவை மக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. ஆனால் நாம் தேவனுடைய பார்வையில் மட்டுமல்ல, மனிதர்களின் பார்வையிலும் நேர்மையாக இருக்கவேண்டும் என்று புதிய ஏற்பாடு நமக்குக் கற்பிக்கிறது. “தேவன் என்னைப் பார்க்கிறார், என் இருதயத்தை அறிவார்” என்று நாம் கூறுவது போதாது. நாம் மனிதர்களுக்கு முன்பாகவும் நேர்மையாக இருக்கவேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது. *“ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்குமுன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்”* (ரோமர் 12:17). உதாரணமாக, ஓர் நபர் அதிக தேவையில் இருக்கிறார் என்பதற்காக, அவர் வேறொருவரிடமிருந்து பொருட்களைத் திருட முடியாது, மேலும் “தேவன் என்னையும் என் சூழ்நிலையையும் அறிந்திருக்கிறார். நான் பொதுவாக இதைச் செய்ய மாட்டேன், ஆனால் என் தேவையின் நிமித்தமாக இதைச் செய்தேன்.” தேவை அதிகம் என்பதற்காக நீ திருடுவதை தேவனும் மன்னிக்கமாட்டார், மனிதனும் மன்னிப்பதில்லை!

**2 கொரிந்தியர் 8:21**
**கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்.**

பவுல் தனக்குக் கொடுக்கப்பட்ட காணிக்கைகளை எப்படிச் சேகரித்தார் என்பதையும், திருச்சபைகள் அவருக்குக் கொடுத்த நிதிகளை அவர் எவ்வாறு கையாண்டார் என்பதையும் விளக்குகிறார். அவர் செம்மையாய் நடந்துகொண்டார்.

அவர் தேவனிடமும் தன்னை நம்பியவர்களிடமும் பெரும் பொறுப்புணர்வோடு பணத்தைக் கையாண்டார். பவுல் தனது எல்லா நடவடிக்கைகளும் தேவனுக்கு முன்பாக மட்டுமல்ல, எல்லா மனிதர்களுக்கு முன்பாகவும் நேர்மையாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

அதனால்தான் ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், எங்கள் வரவு செலவு கணக்குப் புத்தகங்கள் அனைத்தையும் முறையாக வைத்திருக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம் அனைத்து நிதி பரிவர்த்தனைகளின் ரசீதுகள் மற்றும் விவரங்கள் பராமரிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம், இதனால் யாராவது எங்களைக் கேள்வி கேட்டாலும், எல்லாப் பதிவுகளும் அப்படியே இருக்கும். தேவனுக்கும் மனிதனுக்கும் கணக்குக் கொடுக்கும் நிலையில் நாம் இருக்கக்கூடிய கூடுதல் முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும்.

**எபேசியர் 4:25**
**அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்.**

திருச்சபையில் ஒருவருக்கொருவர் பொய் சொல்லிக்கொண்டே “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!” என்று நாம் வாழ்த்திக்கொள்வது விந்தையானது. பொய்யை விட்டுவிட்டு ஒருவருக்கொருவர் உண்மையைப் பேசுமாறு வேதாகமம் நமக்கு அறிவுறுத்துகிறது - நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்தைச் சேர்ந்தவர்கள், நாம் ஒருவருக்கொருவர் உண்மையைப் பேசவேண்டும்.

**1 பேதுரு 2:12**
**புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

உலக மக்கள் நம்மைக் கவனிக்கும்போதுகூட, நம்மை நேர்மையானவர்கள் என்று அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அதுதான் நாம் பராமரிக்க வேண்டிய நேர்மை மற்றும் உத்தமத்தின் நிலையாகும், ஏனென்றால் அவர்கள் நம்மைப் பார்க்கும்போது, நம்மீது குற்றஞ்சாட்டுவதற்கு அவர்களுக்கு எந்தக் காரணமும் இருக்கக்கூடாது.

# 2

# தேவன் நம் உத்தமத்தை (அல்லது அதில் குறைவுற்றிருத்தலை) ஆராய்ந்து அறிகிறார்

தேவன் நமது உத்தமத்தை ஆராய்ந்து அறிகிறார். நமது போதகர்கள் நம் நேர்மையின் அளவை ஒருபோதும் அறிவதில்லை. நமது சுயவிவரக்குறிப்பில் தவறான தகவல்களைப் பதிவிட்டுவிட்டு, ஞாயிற்றுக்கிழமை காலை திருச்சபைக்குச் சென்று தேவனை ஆராதித்தாலும், நமது போதகர்களுக்கு அவை தெரியாது. ஆனால் தேவன் அதை அறிவார். நம்முடைய நேர்மையையும் அல்லது அதன் குறைவையும் அவர் அறிவார். தாவீது ராஜா கூறுகிறார், "*கர்த்தாவே, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும்*" (சங்கீதம் 7:8).

வேதத்தில் தாவீது, "*கர்த்தாவே, என்னை நியாயம்விசாரியும், நான் என் உத்தமத்திலே நடக்கிறேன்; நான் கர்த்தரை, நம்பியிருக்கிறேன். ஆகையால் நான் தள்ளாடுவதில்லை. கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப்பாரும்; என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப்பாரும்*" (சங்கீதம் 26:1,2) என்று ஜெபிக்கிறார். என்ன ஒரு வலுவான ஜெபம்! தாவீது உத்தமமாக நடந்ததால்தான், தனக்கு நியாயஞ்செய்யும்படி தேவனிடத்தில் ஜெபிக்க முடிந்தது. "பொய் சொல்லமாட்டேன் என்று முதலாளியிடம் சொன்னால் வேலையை இழக்க நேரிடும்" என்று அடிக்கடி சொல்வோம். உங்கள் நேர்மையின் காரணமாக உங்கள் வேலையை இழக்க நேரிடும் நிலையில் நீங்கள் இருந்தால் தேவனைத் துதியுங்கள், ஏனென்றால் தாவீது ஜெபித்தபடி நீங்கள் ஜெபித்து உங்களுக்கு நியாயஞ்செய்யும்படி கர்த்தரிடம் கேட்கலாம்.

இருப்பினும், நாம் உத்தமமாக நடக்கவில்லை என்றால், நமக்கு நியாஞ்செய்யும்படி தேவனிடம் கேட்க முடியாது. சங்கீதக்காரனைப் போலவே, நாம் நேர்மையாக நடந்தோம், நேர்மையாக வேலை செய்தோம், சரியானது என்று நமக்குத் தெரிந்ததைச் செய்தோம் என்று சொல்லும் திராணியுள்ளவர்களாக இருக்க வேண்டும், பின்னர்

நமக்காக எதிர்த்துப் போரிட தேவனிடம் கேட்கலாம்.

**எரேமியா 23:23,24**

**[23] நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**[24] எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

வேதாகமத்தில் தேவன் ஓர் சுவாரஸ்யமான கேள்வியைக் கேட்கிறார் - "*எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்*" (எரேமியா 23:24). நம்மை மறைத்துக்கொண்டு, நேர்மையற்ற செயல்களைச் செய்துவிட்டு, தேவன் நம்மைக் கவனிக்கவில்லை என்று ஒரு கணம்கூட நினைத்துக்கொள்ள முடியாது. நிச்சயமாக, வேறு எந்த மனிதனும் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது, ஆனால் தேவன் நம்மைப் பார்க்கக்கூடாதபடிக்கு நாம் செல்லக்கூடிய ரகசிய இடம் பூமியில் இல்லை. கணினிகளுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு, மாதாந்திர அறிக்கையில் பலவிதமான பொய்களை எழுதிவிட்டு, யாருக்கும் எதுவும் தெரியாது என்று நினைக்கலாம். ஆனால் தேவன் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை நினைவில்கொள்ளுங்கள். அவர் நம் இருதயங்களின் உத்தமத்தைப் பரிசோதித்து அறிகிறவராயிருக்கிறார்.

**எபிரெயர் 4:13**

**அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.**

தேவனிடமிருந்து நம்மால் எதையும் மறைக்க முடியாது. நாம் நீதியாகவும் நேர்மையாகவும் வாழ உதவும் தேவனிடத்தில் பயபக்தியுடன் வாழும் பரிசுத்தமுள்ள ஒரு இடத்திற்கு நாம் வர வேண்டும்.

# 3

# நாம் ஏன் இன்னும் நமது உத்தமத்தில் சமரசம் செய்துகொள்கிறோம்?

நம்மில் பெரும்பாலானோருக்கு இதுவரை படித்தவை அனைத்தும் தெரிந்திருக்கும். சிறுவயதிலிருந்தே, பொய் சொல்வது தவறு, நேர்மையாக இருக்கவேண்டும், நீதியாக நடக்கவேண்டும் என்று நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இதுவரை குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான வேத வசனங்களை நாம் நன்கு அறிந்திருக்கலாம். நம் வேதாகமத்தில் அவற்றை சிறப்பு வண்ணந்தீட்டியுமிருக்கலாம்.

ஆனால் இந்தக் கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

- நாம் ஏன் இன்னும் பொய் சொல்கிறோம்?
- நாம் நீண்ட காலமாக கிறிஸ்தவர்களாக இருந்தாலும், நம்முடைய வேலை, ஊழியம் மற்றும் பலவற்றில் இன்னும் நேர்மையற்றவர்களாக இருப்பது ஏன்? பெரும்பாலும், நாம் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக பணம் திரட்டுகிறோம் என்று மக்களிடம் சொல்லி, பணத்தை வேறு காரணத்திற்காகப் பயன்படுத்துகிறோம்.
- இவை அனைத்தையும் அறிந்த தேவனுடைய மக்கள் ஏன் இன்னும் நேர்மையற்றவர்களாக இருக்கிறார்கள்?

நாம் நேர்மையற்ற முறையில் தொடர்ந்து வாழ்வதற்கு சில காரணங்கள் உள்ளன. இவை நம் வாழ்வில் உத்தமம், நேர்மை மற்றும் நீதியைப் பேணுவதைத் தடுக்கின்றன. சில சாத்தியமான காரணங்கள் பின்வருமாறு.

**தேவன் மீது உண்மையான பயமின்மை மற்றும் தேவ கிருபையை அலட்சியமாக எடுத்துக்கொள்ளுதல்**

சில சமயங்களில், தேவனுடைய மன்னிப்பு, இரக்கம், உறுதியான அன்பு மற்றும் நன்மை ஆகியவற்றைப் பற்றி பேசும் வசனங்களை நாம் நன்கு

அறிந்திருந்தாலும், அதை நாம் எளிதாக எடுத்துக்கொள்கிறோம். நாம் தொடர்ந்து பொய் பேசுபவர்களாகவும் நேர்மையற்றவர்களாகவும் இருந்தாலும்கூட, தேவன் நம்மை மன்னிப்பார் என்ற எண்ணம் நமக்குண்டு. நம் வாழ்வில் உண்மையான தேவ பயம் இல்லை. *“கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்”* (நீதிமொழிகள் 16:6). உண்மையாய் கர்த்தருக்கு பயப்படுதலே ஒரு மனிதனை தீமையிலிருந்து விலகச் செய்யும். பாவம், நேர்மையின்மை, பொய் மற்றும் அநீதி ஆகியவற்றில் ஈடுபடாதிருக்க வேண்டுமானால், நாம் அவருக்கு மிகவும் பயந்து நடக்கவேண்டும். தேவபயம் இல்லாதபோது, நமக்குப் பிடித்ததைச் செய்வோம். நாம் தேவனுடைய கிருபையை நம்பியிருக்கிறோம் என்பது உண்மைதான், ஆனால் அதே நேரத்தில், நம் இருதயத்தில் கர்த்தருக்குப் பயப்பட வேண்டும்.

சில தேவ ஊழியர்களும், பிரசங்கியார்களும் தங்கள் வாழ்க்கையில் தேவ பயம் இல்லாமல் இருப்பதும், பிரசங்க பீடத்திலிருந்து இறங்கியதும், பொய்களைப் பேசவும், எல்லாவிதமான தவறான செயல்களைச் செய்யவும் தயங்காமல் இருப்பதும் வருத்தமளிக்கிறது. தேவனுடைய ஊழியர்களான நமக்கு தேவ பயம் இல்லாதபோது, தேவனுக்குப் பயப்படுவதை எவ்வாறு மக்களுக்குக் கற்பிக்கப்போகிறோம்? கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு நிலைக்கு நாம் வர வேண்டும்.

### மனிதனுக்குப் பயப்படுதல்

சில சமயங்களில் நாம் மக்களுக்குப் பயந்து பொய் சொல்கிறோம் - நாம் அவர்களிடம் உண்மையைச் சொன்னால் அவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்று பயப்படுகிறோம். மனித பயத்தை நாம் போக்கவேண்டும்! நம்முடன் பழகுபவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் உண்மையைப் பேசுவதற்கும் நேர்மையாய் நடப்பதற்கும் நாம் தைரியமாக இருக்கவேண்டும்!

### பின்விளைவுகளைப் பற்றிய பயம்

“இந்தச் சூழ்நிலையிலிருந்து நான் பொய் சொல்லவில்லை என்றால், நான் அதில் மாட்டிக்கொள்ளப்போகிறேன், எனவே நான் எனக்கு சாதகமாகப் பொய் சொல்கிறேன்” என்பது பொய் சொல்வதற்கு மக்கள் வைத்திருக்கும் மற்றொரு சாக்குப்போக்காகும். பின்விளைவுகளைப் பொருட்படுத்தாமல் உண்மையாக நடக்க நாம் தைரியமாக இருக்கவேண்டும். நினைவில்கொள்ளுங்கள், நாம் நேர்மையாக

நடக்கும்போது, தேவன் நம் பக்கம் இருக்கிறார்!

### புகழ் / பெருமை

சில நேரங்களில், ஆபத்தில் இருக்கும் நமது நற்பெயரையும் பெருமையையும் பாதுகாக்க விரும்புவதால், நாம் பொய் சொல்கிறோம். உதாரணமாக, நீங்கள் உங்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றீர்களா என்று யாராவது நம்மிடம் கேட்டால், உண்மையாகத் தேர்ச்சி பெறவில்லை என்றாலும், "ஆம்" என்று சொல்லிவிடுவோம்.

### நம்பிக்கைக்குப் பதிலாக சௌகரியத்தைச் சார்ந்து வாழ்வது

நாம் நம்பிக்கை வைத்து வாழ்வதற்குப் பதிலாக சௌகரியத்திற்காக வாழ முனைகிறோம், ஏனென்றால் நம்பிக்கையுடன் வாழ்வதற்கு அதிக முயற்சி தேவைப்படுகிறது. எப்பொழுதும் உண்மையைப் பேசவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும்போது, என்ன நடந்தாலும் உண்மையைப் பேசவேண்டும். "எளிதாக இருந்தால் உண்மையைப் பேசுவேன்; அது கடினமாக இருந்தால், நான் என் வழியில் பொய் சொல்வேன்" என்று சௌகரியம் சொல்கிறது. நீங்கள் உறுதியுடன் வாழ்வீர்கள் என்று நீங்களே உங்களுக்குச் சொல்லிக்கொள்ளுங்கள்! நாம் உறுதியுடன் வாழ வேண்டும், சௌகரியத்திற்காக வாழக்கூடாது. நாம் உறுதியான, உண்மையான மற்றும் நேர்மையான மனுஷர்களாகவும் மனுஷிகளாகவும் இருப்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

### பிரியப்படுத்தாமல் இருந்துவிடுவோம் / காயப்படுத்திவிடுவோம் என்ற பயம்

சில சமயங்களில், மக்கள், தாங்கள் பேசிக்கொண்டிருக்கும் நபரைக் காயப்படுத்த விரும்பாததால் பொய் சொல்கிறார்கள். நல்ல எண்ணத்தில் செய்தாலும் பொய் பொய்யே!

### காரியங்களை மறைப்பதன் மூலம் நல்லவர்களைப்போலத் தோற்றமளிக்க முயற்சித்தல்

சில நேரங்களில், தங்கள் நண்பரைக் காப்பாற்ற முயற்சிக்கும்போது, மக்கள் பொய் சொல்கிறார்கள். நீங்கள் எவ்வளவு நேர்மையாக இருந்தாலும் பொய் பொய்யே! இதை நினைவில் வையுங்கள் - உண்மை தானாகவே நிலைநிற்கும்; பொய்யால் உண்மையைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை!

# 4
# நேர்மையின்மையின் விளைவுகள்

நேர்மையாய் இருப்பதில் நாம் சமரசம் செய்துகொள்வதற்கு மற்றொரு காரணம், அதன் விளைவுகளின் தீவிரத்தை நாம் உண்மையில் புரிந்துகொள்ளாததுதான். பல சமயங்களில், தேவனிடத்தில் சென்று மன்னிக்கும்படி கேட்டால், எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கிறோம். நிச்சயமாக தேவன் நம்மை மன்னிக்கிறார், ஆனாலும் விளைவுகளை நாம் அனுபவிக்கவேண்டியிருக்கும். தேவன் எல்லா விளைவுகளையும் மாற்றப்போவதில்லை. நாம் எதை விதைத்தோமோ அதன் பலனை அறுவடை செய்யவேண்டும். நேர்மையின்மையின் விளைவுகளை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கான சில வேத வசனங்களைப் பார்ப்போம்.

**நீதிமொழிகள் 19:5**
**பொய்ச்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை.**

பல நேரங்களில், நாம் தப்பிக்க பொய்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால், *"...பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை"* (நீதிமொழிகள் 19:5ஆ) என்று தேவனுடைய வார்த்தை கூறுவதை நாம் உணர்வதில்லை. பொய் சொல்லி ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலிருந்து வெளியேறிவிடுவதால் நாம் மகிழ்ச்சியடையலாம், ஆனால் நாம் உணராதது என்னவென்றால், நாம் மனந்திரும்பி நம்மைச் சுற்றியுள்ள விஷயங்களை சரியாகக் கையாளும் வரை அவை எப்பொழுது வேண்டுமானாலும் நம்மைத் தொடர்ந்து பற்றிப் பிடிக்கும்.

- நாம் பெரிய கண்ணிகளில் சிக்கிக்கொள்கிறோம் என்பதை உணராமல் நெருக்கடியான சூழ்நிலைகளிலிருந்து தப்பிக்க அடிக்கடி பொய் சொல்கிறோம்!

**நீதிமொழிகள் 20:17**
**வஞ்சனையினால் வந்த போஜனம் மனுஷனுக்கு இன்பமாயிருக்கும்; பின்போ அவனுடைய வாய் பருக்கைக் கற்களால் நிரப்பப்படும்.**

வஞ்சகத்தால் சம்பாதித்த உணவு ஆரம்பத்தில் இனிமையாக இருக்கலாம், ஆனால் அதை வஞ்சகத்தால் சம்பாதித்திருந்தால், *“அவனுடைய வாய் பருக்கைக் கற்களால் நிரப்பப்படும்”* (நீதிமொழிகள் 20:17ஆ) என்று வேதாகமம் கூறுகிறது. ஆறுமாதங்கள் மட்டுமே பணி அனுபவத்தைப் பெற்றிருக்கும் ஒருவர், தனக்கு ஆறு வருட பணி அனுபவம் இருப்பதாகத் தனது சுயவிவரக் குறிப்பில் எழுதுவதுதான் ஏமாற்று வேலை! நேர்மையற்ற வழியில் சம்பாதித்த பணம், ஆரம்பத்தில் இனிமையாக இருந்தாலும், பின்னர் வாயில் பருக்கைக்கற்கள் இருப்பதைப்போல் இருக்கும். நீதிமொழிகள் 21:6-ம் இதே சத்தியத்தைத் தெரிவிக்கிறது - *“பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும்.”* நேர்மையின்மையால் நாம் பெறும் செல்வம் நம்மை மரணத்திற்கும் அழிவுக்கும் கூட்டிச்செல்கிறது, அந்தச் செல்வங்கள் விரைவில் அழிந்துவிடும்.

- நேர்மையின்மை “விரைவாகவும் எளிதாகவும் தப்பித்துக்கொள்வதற்கான” வழிபோல் தோன்றலாம்; ஆனால் அதன் விளைவுகள் விரைவில் நம்மைப் பற்றிப் பிடிக்கும்!

**நீதிமொழிகள் 29:12**
**அதிபதியானவன் பொய்களுக்குச் செவிகொடுத்தால், அவன் ஊழியக்காரர் யாவரும் துன்மார்க்கராவார்கள்.**

- தலைமைப் பொறுப்பில் இருப்பவர் நேர்மையற்றவராக இருந்தால், அவருக்குக் கீழ் இருப்பவர்கள் அனைவரும் அதே வழியில் செல்வார்கள்!

**ஓசியா 10:12,13**
**[12]நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது.**
**[13]அநியாயத்தை உழுதீர்கள், தீவினையை அறுத்தீர்கள்; பொய்யின் கனிகளைப் புசித்தீர்கள்; உங்கள் வழியையும் உங்கள் பராக்கிரமசாலிகளின் திரளையும் நம்பினீர்கள்.**

ஓசியா 10:12,13 மிகவும் சுவாரஸ்யமான உண்மையைத் தெரிவிக்கிறது. ஒவ்வொரு முறையும் நாம் பொய் சொல்லும்போது, நாம் அநீதியையும், அக்கிரமத்தையும் விதைக்கிறோம், சீக்கிரத்தில், நம் பொய்யின் பலனை நாம் அனுபவிக்கப்போகிறோம். பொய்கள் அவற்றின் பலனைத் தரும், நாம் அதனைப் பெறுவோம். எனவே, நம் பொய்க்கும் நேர்மையின்மைக்கும் அதற்கான பலன் உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்

- நாம் விதைக்கும் ஒவ்வொரு பொய்க்கும் *"பொய்களுக்கான பலன்"* இருக்கிறது!

**யோவான் 8:44**
**நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.**

- நாம் பொய் சொல்லும்போது, சாத்தானின் செயல்களில் பங்குகொள்கிறோம்!

பொய்யர்கள் அக்கினிக் கடலில் தள்ளப்படுவார்கள் என்று வேதாகமம் சொல்கிறது - அவற்றின் விளைவு மிக மோசமாயிருக்கும்.

**வெளிப்படுத்தல் 21:8**
**பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.**

கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்படுகிறோம் என்று வேதாகமம் கூறுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினால் ஒவ்வொரு நபரும் இரட்சிக்கப்படுகிறார்கள், மேலும் இயேசு கிறிஸ்துவில் கிருபை, இரக்கம், தயவு, மன்னிப்பு மற்றும் இரட்சிப்பு உண்டு. இருப்பினும், தேவனால் குறிப்பிடப்பட்ட கடுமையான விளைவும் அதற்கு உண்டு - நாம் பொய்யர்களாக இருந்தால், நாம் நரகத்திற்கு அனுப்பப்படுவோம் (வெளிப்படுத்தல் 21:8). சாத்தான் பொய்களுக்குப் பிதாவாயிருக்கிறான், அவனில் உண்மையே இல்லை (யோவான் 8:44), எனவே தேவன் பொய்யர்களிடம், "நீங்கள் தொடர்ந்து பொய் பேசினால் உங்கள் பிதாவுடன் சேர்ந்து வாழுங்கள்!" என்று சொல்வார். பொய் சொல்வதற்கும், உண்மையைப் பேசாமல் இருப்பதற்கும் இவ்வளவு பாதகமான விளைவு உண்டா! நேர்மையின்மைக்கான விளைவுகள் இந்த உலகத்திலும், இனி வரவிருக்கும் உலகத்திலும் உண்டு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, "தேவனே, நான் துன்மார்க்கத்தை விதைக்க விரும்பவில்லை, என் பொய்களின் பலனை நான் அனுபவிக்க விரும்பவில்லை. அக்கிரமத்தையும் துன்மார்க்கத்தையும் அறுவடைசெய்ய நான் விரும்பவில்லை" என்று அறிக்கையிடச். செய்யும் பரிசுத்த பயத்திற்கு நேராக நாம் வழிநடத்தப்பட வேண்டும்.

- இறுதியான விளைவு - பொய்யர்கள் நரகத்திற்குச் செல்வார்கள்!

# 5

# உத்தமனின் ஆசீர்வாதங்கள்

நேர்மையாகவும், நீதியாகவும், உத்தமமாகவும் நடப்பவர்களுக்கு மேன்மையான ஆசீர்வாதங்கள் உண்டு.

## ஆசீர்வாதம் மற்றும் தயவு

**சங்கீதம் 5:12**
**கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து, காருணியம் என்னுங் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்துகொள்வீர்.**

நீங்கள் ஒரு நேர்காணலுக்குச் செல்கிறீர்கள், தேவனுடைய தயவுக்காக ஜெபிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். தேவன் நீதிமான்களுக்குதயவுசெய்வார்என்றுவேதாகமம்சொல்கிறது.உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் நேர்மையற்றவராக இருந்தால்,தேவனுடைய தயவைப் பெறுவதை நீங்கள் மறந்துவிடலாம், ஏனென்றால் அவர் எப்போதும் நீதிமான்களை ஆசீர்வதிப்பார், நேர்மையற்றவர்களையும் நீதியில்லாதவர்களையும் அல்ல, நேர்மையானவர்களை காருணியம் என்னுங் கேடகமாகிய தயவினால் சூழ்ந்துகொள்வார் என்று அவர் கூறுகிறார். எனவே, நாம் என்ன செய்யவேண்டும்? சுயவிவரப் பதிவில் “ஆறு வருடங்கள்” என்று பொய்யாக எழுதாமல், நமக்கு ஆறு மாத அனுபவம் மட்டுமே இருக்கிறது என்று உண்மையைச் சொல்லி, ஆறு வருட அனுபவமுள்ள ஒருவருக்கு வேலை கிடைக்கும்படி விட்டுக்கொடுத்துவிட்டு, தேவனைச் சார்ந்திருக்கிறோம் என்று நாம் தைரியமாகச் சொல்லவேண்டும். சுயவிவரப் பதிவில் போலியான தகவல்களை எழுதுவதைவிட இப்படிச் செய்வதே சரியான செயலாக இருக்கும். நீதியாய் இருக்கும்போதுதான் தேவனால் காருண்யம் எனும் தயவு பாராட்ட முடியும்.

## பாதுகாப்பு மற்றும் ஜெபத்திற்கான பதில் பெறுதல்

சங்கீதக்காரன் கூறுகிறார், *“உத்தமமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது; நான் உமக்குக் காத்திருக்கிறேன்”* (சங்கீதம் 25:21). நாம் உத்தமத்துடனும் நேர்மையுடனும் நடந்தோம் என்று தேவனிடத்தில் சொல்லி, நாங்கள் காப்பாற்றப்படுவோம், பாதுகாக்கப்படுவோம் என்று எங்களுக்குத் தெரியும் என்று சொல்வது எவ்வளவு

பாதுகாப்பான ஒரு நிலை!

**சங்கீதம் 34:15**
**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது.**

**சங்கீதம் 34:17**
**நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.**

**சங்கீதம் 34:19**
**நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.**

ஜெபத்திற்கான பதிலைப் பெறுதலும், பாதுகாப்பும் நீதிமான்களுக்கே உரியது. நாம் இந்த நிலைப்பாட்டை எடுக்கும்போது, நிறைய துன்பங்களைச் சந்திக்க நேரிடும் என்றாலும், அவை ஒவ்வொன்றிலிருந்தும் தேவன் நம்மை விடுவிப்பார்.

## நிரந்தர பாதுகாப்பு

**நீதிமொழிகள் 12:19**
**சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும்; பொய் நாவோ ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும்.**

உண்மை நிலைநிற்கும்! பொய்கள் அவைகளின் இன்றைய நோக்கத்தை நிறைவேற்றலாம், ஆனால் அவை நாளை இல்லாமல் போய்விடும். நாம் அவைகளை நம்பி இருக்கமுடியாது. முதல் பொய்யைத் தக்கவைக்க நாம் இன்னும் பல பொய்களை உருவாக்க வேண்டியிருக்கும். பொய்யில் பாதுகாப்பு இல்லை. இருப்பினும், நாம் உண்மையைப் பேசும்போது, நாம் பாதுகாப்பாக உணர்வதோடு பாதுகாப்பாகவும் இருக்கிறோம். நம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் உண்மை தன்னைப் பாதுகாத்துக்கொள்கிறது!

## மனத்தெளிவு / வெளிச்சம்

**சங்கீதம் 97:11**
**நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது.**

நாம் நீதியில் நடக்கும்போது, தேவனுடைய வெளிச்சம் நம் பாதைகளில் விழும்படி எதிர்பார்க்கலாம். நாம் நேர்மையாக நடக்காதபோது, பாதை முழுவதும் இருளாக இருப்பதாகவும், எதிர்காலம் இருண்டதாகவும் இருக்கிறது என்று நாம் குறை கூற முடியாது. இதைப் பற்றி இவ்வாறு சிந்தித்துப் பாருங்கள் - ஒவ்வொரு முறையும் நாம் பொய் சொல்லும்போது, நம் வாழ்க்கையில் தேவ

ஒளியை “அணைத்துப்போடுகிறோம்”, ஒவ்வொரு முறையும் நாம் நீதியில் நடக்கும்போது, நாம் பாதையை தெளிவாகக் காணும் வகையில் ஒளியை “பிரகாசிக்கச்” செய்கிறோம்!

## மரபு

**நீதிமொழிகள் 20:7**
**நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்; அவனுக்குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்கியவான்களாயிருப்பார்கள்.**

நாம் நமது உத்தமத்தில் நடக்கும்போது, நம் குழந்தைகளுக்கு ஆசீர்வாதத்தை விட்டுச்செல்கிறோம். மாறாக, நாம் உத்தமமாக நடக்காதபோது, நம் குழந்தைகளுக்கு சாபத்தை விட்டுச்செல்வோம். நாம் நேர்மையாக நடக்கிறோமா இல்லையா என்பதன் மூலம் நம் குழந்தைகளுக்கு நாம் விட்டுச்செல்லும் மரபு தீர்மானிக்கப்படுகிறது.

# 6

# மறுஉத்தரவு - விடுதலை, மனந்திரும்புதல், துறப்பு மற்றும் அர்ப்பணிப்பு

### பொய்யின் ஆவி எனும் அடிமைத்தனத்தை உடைத்தல்

நாம் சத்தியத்தை அறிந்து மாத்திரமே வைத்திருக்கும் இடத்திலிருந்து அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்கும் இடத்திற்குக் கடந்து செல்ல வேண்டும். உங்களில் சிலர் பொய் சொல்வதை உங்கள் இரண்டாம் இயல்பாகக்கூட வைத்திருக்கலாம், நீங்கள் அதை உங்களை அறியாமலேயே செய்துகொண்டும் இருக்கலாம். வேதாகமத்தில் குறைந்தது இரண்டு இடங்களில் பொய்யின் ஆவிகள் குறிப்பிடப்படுகிறது (1 இராஜாக்கள் 22:22,23; 2 நாளாகமம் 18:21,22). பொய்களை ஊக்குவித்து, மக்களின் குணாதிசயங்கள் மற்றும் நடத்தைகளைப் பாதிக்கும் பிசாசுகள் உள்ளன என்பதே இதன் பொருள். நீங்கள் மறுபடியும் பிறந்தவராகவும், ஆவியால் நிரப்பப்பட்டவராகவும், அந்நியபாஷைகளில் பேசக்கூடியவராகவும் இருந்தாலும் கூட, நீங்கள் பொய்யின் ஆவியின் கட்டுப்பாட்டில் இருக்கலாம். தேவனைத் தேடுங்கள், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுங்கள்!

### பொய் சொல்வதைப் பற்றிய உங்கள் அணுகுமுறையை மாற்றுங்கள்

**நீதிமொழிகள் 13:5**
**நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான்; துன்மார்க்கனோ வெட்கமும் இலச்சையும் உண்டாக்குகிறான்.**

**சங்கீதம் 119:163**
**பொய்யைப் பகைத்து அருவருக்கிறேன்; உம்முடைய வேதத்தையோ நேசிக்கிறேன்.**

நேர்மையற்ற தன்மை தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதை நம்மில் பெரும்பாலானோர் அறிந்திருந்தாலும், மற்றவர்களிடமும் நம்மிலும் நாம் அதைப் பொறுத்துக்கொள்கிறோம். பொய் சொல்வதை சகித்துக்கொள்வது உட்பட, எந்த வகையான நேர்மையின்மையையும் சகித்துக்கொள்ள முடியாத ஒரு பரிசுத்த இடத்திற்கு நாம் கடந்துவர வரவேண்டும். நாம் மக்களிடம்

சகிப்புத்தன்மையற்றவர்களாய் அல்ல, மாறாக பொய் மற்றும் நேர்மையற்ற நடைமுறையை நாம் சகிக்கமுடியாதவர்களாயிருக்க வேண்டும். பொய் சொல்வதை நாம் வெறுக்க வேண்டும். *“நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான்”* (நீதிமொழிகள் 13:5அ) என்று வேதாகமம் கூறுகிறது. பொய் பேசுவதைப் பற்றிய நம் மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். நம் வாழ்விலிருந்து பொய்யைப் போக்க தேவகிருபையை நாடுவோமாக. கடினமாயினும் உண்மையைப் பேசுவதில் உறுதியாக இருப்போமாக.

## நேர்மையற்றவருடன் கூட்டு சேர மறுத்துவிடுங்கள்

**சங்கீதம் 101:7**
**கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை.**

மற்றவர்களின் நேர்மையற்ற செயல்களில் பங்கேற்க வேண்டாம். பணியிடத்திலோ அல்லது பிற இடங்களிலோ பல்வேறு வகையில் கூட்டாக நாம் மக்களுடன் பணிபுரியும்போது, மற்றவர்களின் நேர்மையற்ற செயல்களில் நாம் பங்கேற்பது மிகவும் உண்மை. சில சமயங்களில் மற்றவர்கள் பொய் சொல்வதைப் பார்க்கும்போது, அதை மறுத்துப் பேசுவதற்குப் பதிலாக அல்லது அந்த பொய்யுடன் ஒத்துப்போக மறுப்பதற்குப் பதிலாக நாம் அவர்களுடன் ஓர் அணியிலிருக்கிறோம். அவை அந்த நபரின் பொய் என்றும், நாம் அதைச் சொல்லாததால், நாம் பரிசுத்தமாக இருக்கிறோம் என்றும் கருதுகிறோம். ஆனால் அந்தப் பொய்க்கு நாமும் உடந்தையாக இருக்கிறோம் என்பதே உண்மை.

எங்கள் திருச்சபையைத் தொடங்கிய ஆரம்ப ஆண்டில் ஒரு வருடம் முழுவதும் எங்களது எல்லா ஆராதனைகளிலும், பிரார்த்தனைக் கூட்டங்களிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்துகொண்ட ஓர் இளைஞனை நான் நினைவுகூறுகிறேன். நான் அவனிடம் எதுவும் சொல்லவில்லை என்றாலும், அவனைப் பார்த்து நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன். ஓர் ஞாயிற்றுக்கிழமை காலை, நான் “அர்ப்பணிப்பின் வல்லமை” என்ற தலைப்பில் பிரசங்கம் செய்தேன், சூழ்நிலைகளுக்கு மத்தியில் உத்தமமமாயிருப்பதைப் பற்றிப் பேசினேன். திருச்சபை ஆராதனையின் முடிவில், இந்த நபர் என்னை அணுகி, வெளிநாட்டில் உள்ள ஓர் வேதாகமக் கல்லூரிக்கு விண்ணப்பித்திருப்பதாக எனக்குத் தெரிவித்தான். மேலும் விசா மற்றும் பிற தேவைகளுக்காக, கடந்த ஒரு வருடமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பணிபுரிவதாகக் கடிதம் எழுதவேண்டும் என்று அவன் என்னிடம் கேட்டுக்கொண்டான். திருச்சபை அவனை வேதாகமக் கல்லூரியில் படிக்க அனுப்புவதாகவும், படிப்பை முடித்த பிறகு அவன் திரும்பி வந்து திருச்சபையில் ஊழியம் செய்யப்போவதாகவும் நான்

அதில் குறிப்பிடும்படி அவன் கேட்டுக்கொண்டான். இருப்பினும், அந்த இளைஞன் கடிதத்தில் எழுத விரும்பியதில் எதுவும் உண்மை இல்லை. நான் அதிர்ச்சியடைந்தேன்! வேறொரு நாளில் என்னைச் சந்திக்க வருமாறு அவனிடம் சொன்னேன். நாங்கள் சந்தித்தபோது, அவன் அப்படி ஓர் கோரிக்கை வைப்பதுகூட தவறுதான் என்று அவனிடம் சுட்டிக்காட்டினேன். அந்தக் காலகட்டத்தில் அவன் தவறாமல் திருச்சபையில் கலந்துகொண்டதாக எழுதிய ஓர் கடிதம் மட்டுமே நான் அவனுக்குக் கொடுப்பேன் என்று கூறி, கடிதத்தை அவனிடம் கொடுத்தேன்.

இதைத்தான் நான் தெரிவிக்க முயற்சிக்கிறேன். நாம் தவறாமல் திருச்சபைக்குச் சென்று வரலாம், பல செய்திகளைக் கேட்கலாம், ஆனாலும் இன்னும் பொய் மற்றும் நேர்மையற்ற நடைமுறைகளை நாடுகிறவர்களாகவும் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களை நாம் சந்திக்கும்போது, அவர்கள் எந்த திருச்சபையில் கலந்துகொள்கிறார்கள் என்றும், உத்தமத்தின் அவசியம் பற்றி அவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறதா என்றும் நாம் ஆச்சரியப்படுகிறோம். கிறிஸ்தவ சகோதர சகோதரிகள் நேர்மையின்மையிலும் அநீதியிலும் நடந்த பல சம்பவங்களை என்னால் நினைவுகூர முடியும்.

ஆனால் இப்போது எல்லாம் மாற்றப்பட வேண்டும். நேர்மையின்மையை சகித்துக்கொள்வதைவிட்டுவிட்டு, எல்லா வகையான நேர்மையற்ற தன்மையையும் வெறுத்து பகைக்கும் ஓர் இடத்திற்கு நாம் வரவேண்டும்.

### அர்ப்பணிப்புக்கான ஜெபம்

நாம் அர்ப்பணிப்புக்கான ஓர் ஜெபம் செய்வோம். சங்கீதக்காரன் இவ்வாறு ஜெபித்தார்: *“கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்”* (சங்கீதம் 141:3) மற்றும் *“பொய்வழியை என்னை விட்டுவிலக்கி, உம்முடைய வேதத்தை எனக்கு அருள்செய்யும்”* (சங்கீதம் 119:29).

தேவனுக்கு முன்பாக உத்தமம், நேர்மை மற்றும் நீதியுள்ள இடத்திற்கு நாம் கடந்து வருவோம். நாம் இரட்சிக்கப்பட்டோம் என்பதை அறிவோம். தேவன் இரக்கம், அன்பு மற்றும் கருணை கொண்ட தேவன் என்பதை நாம் அறிவோம். இருப்பினும், அதை நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். தேவனுடைய கிருபையை நாம் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. நாம் அனைவரும் வெவ்வேறு அளவுகளில் நேர்மையற்றவர்களாக இருப்பதால், தேவனிடமிருந்து இந்தப் பகுதியில் ஓர் தொடுதல் நமக்குத் தேவையாய் இருக்கிறது.

## ஜெபம்

*தேவனே, பொய் வழியை என்னிடமிருந்து அகற்றும். நேர்மையின்மையையும் உத்தமமின்மையையும் என்னிடமிருந்து அகற்றும். நேர்மையின்மைக்கான எனது சகிப்புத்தன்மையை அகற்றி, நேர்மையற்ற தன்மையை வெறுக்க உதவிசெய்யும். என் வாழ்க்கையில் ஓர் "மாற்றத்தை" செய்யும், கர்த்தாவே! உம் ஆவியின் பட்டயத்தால் ஆழமாகத் தோண்டி அதை வேர்களோடு தகர்த்தெறியும். நான் என் வாழ்க்கையில் நேர்மையற்ற தன்மையை இவ்வளவு காலமாக சகித்துக்கொண்டேன், ஆனால் இப்போது நான் உம்மிடம் வந்து, நீர் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி வேண்டுகிறேன். கோடரியை வேர்களில் வைத்து வேர்களோடு அகற்றிவிடும். பொய்யை அகற்றி, நேர்மையின்மையை நீக்கி, அநீதியை என்னிடமிருந்து அகற்றும். நான் உமக்கு முன்பாக உத்தமமாக நடந்து, நியாயத்துக்காகவும், தயவுக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் உம்மை நோக்கிப் பார்க்கும் ஓர் நபராக இருக்க விரும்புகிறேன். நான் உண்மையாக நடந்துகொள்ளும் ஓர் நபராகவும் உமக்கு மகிழ்ச்சியாகவும் இருக்க விரும்புகிறேன். நான் மக்களை வருத்தப்படுத்தினாலும் பரவாயில்லை. என் தேவனே நான் உம்மை மகிழ்விக்க விரும்புகிறேன், உமக்கு இன்பம் தர விரும்புகிறேன். நீர் என்னைப் பற்றி மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன். கர்த்தாவே, பரிசுத்த ஆவியின் சுத்திகரிப்பின் கிரியை மற்றும் வல்லமையால் மட்டுமே என் ஆத்துமாவின் ஆழத்திற்குச் சென்று என் வாழ்க்கையில் இந்தப் பாவ வேர்களை அறுக்க முடியும். நான் உம் சிங்காசனத்தின் முன் என்னை நிலைநிறுத்துகிறேன்; என்னுள் கிரியை செய்ய இந்த நேரத்தை எடுத்துக்கொள்ளும். உமது பரிசுத்த ஆவியின் வல்லமையால் இதைச் செய்யும். இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.*

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம்(கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில்

அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"… அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்" (அப்போஸ்தலர் 10:43).***

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9).***

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- **ஒரு குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தைஅடிப்படையாகக்கொண்டவர்களாக,**தேவனுடையவார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- ஒரு **உலகளாவிய ஊழியமாக**, தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations**ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org**க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி: +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998**
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் ‘கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்’ ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்”க்கு காசோலை/ வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு - 560043, கர்நாடகா

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.


**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




***A daily 5-minute video devotional.***
***A daily Bible reading and prayer guide.***
***5-minute Sermon summary.***
***Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.***
***Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.***

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குண நலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

• இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
• இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (D.Th.)
• இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும்.** நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

• **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
• **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
• **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில்** விண்ணப்பிக்கவும், மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

இன்றைய உலகில், கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் சீர்கேடு, நேர்மையின்மை, லஞ்சம் போன்றவை இயல்பான ஒன்றாகக் காணப்படுகின்றன. உலக ஜனங்கள் அப்படித்தான் வாழ்கிறார்கள், ஏனென்றால் அவர்களுக்கு அப்படித்தான் கற்பிக்கப்பட்டுள்ளது; எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது. இருப்பினும், தேவனுடைய ஜனங்களாகிய நமக்குள் நேர்மையின்மை, அநீதி மற்றும் உத்தமத்தில் குறைவு ஆகியவற்றைக் காணும்போது, அது மிகவும் வருத்தமளிப்பதாக இருக்கிறது - ஏனென்றால், குறைந்தபட்சம், தேவனுடைய ஜனங்களாகிய நாம், அவர்களைப் போலல்லாமல், நேர்மையாக வாழ வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

உத்தமம், நேர்மை, பரிசுத்தம் மற்றும் நீதியில் நடப்பது எப்படி என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்; ஏனென்றால் தேவனுடைய வார்த்தையில் இவை அனைத்தையும் பற்றி நாம் வாசிக்கிறோம். சபை மேய்ப்பர்கள், பிரசங்கியார்கள், போதகர்கள் மற்றும் தேவ வார்த்தையைப் பிரசங்கிக்கும் ஊழியர்கள் மத்தியில் அநீதி, நேர்மையின்மை மற்றும் உத்தமத்தில் குறைவு ஆகியவற்றைக் காண்பது இன்னும் வருந்தத்தக்கதாய் இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும், நமது கிரியைகள் எல்லாவற்றிலும் உத்தமத்தோடும், நேர்மையுடனும், நீதியுடனும் செயல்பட முற்றிலும் நம்மை அர்ப்பணிக்கும் நிலைக்கு வர வேண்டும், மேலும் இந்தப் புத்தகமானது நமக்குள் இருக்கும் இப்படிப்பட்ட குணங்களை நிச்சயம் தட்டி எழுப்பிவிடும்.

All Peoples Church & World Outreach
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org